[16th February 1959

SRI V. K. KOTHANDARAMAN : இதில் இருக்கக்கூடிய ஊழல் தெரிந்துவிடும் என்று போடுவதில்லையா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கமிட்டி அங்கத்தினர்களை நியமிப்பது கலெக்டர் கையில் விட்டிருக்கிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் டைரெக்டர் கையில் இருக்கிறது. இவர்கள் பார்த்து யாரைப் போட்டால் இந்த ஹாஸ்டல் நிர்வாகம் நன்றாக நடக்கும் என்று நினைக்கிறார்களோ அவர்களைப் போடுகிறார்கள்.

SRI A. GOVINDASAMY : ஹாஸ்டல்களை நடத்துகிற கமிட்டிகளை எல்லா இடங்களிலும் நியமித்திருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : எல்லா இடங்களிலும் நியமிக்கப்படுகிறது. கலெக்டர் இவர்களை நியமித்து வருகிறார்கள்.

*Matching Grant*

* 57 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the panchayats in Kanyakumari and Shencottah taluks are entitled to 'Matching Grant'; and

(*b*) if so, to what extent?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) Yes, Sir. Every panchayat in the transferred area is entitled to get Government contribution equal to the amount collected by the panchayat during a particular year by levying rates, taxes and other fees, subject to a maximum of Rs. 2,000.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தச் சிறு நிகர மானியம் இதுவரை எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டை மாவட்டத்திலும் இன்னும் கொடுக்கப்படவேண்டிய மாச்சிங் கிராண்டு எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதுவரையிலும் மொத்தமாக இரண்டு லட்சத்து நாற்பத்தாராயிரம் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனியாக எவ்வளவு எவ்வளவு கொடுகப்பட்டிருக்கிறது என்ற விபரத்திற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இன்னும் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு இருக்கிறதென்று சொல்ல முடியுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தகராறு இல்லாத இடங்களுக்குக் கொடுக்கப்பட்டது. தகராறு ஏதாவது இருந்து வரும் இடங்களில் கொடுக்கப்படாமல் இருக்கலாம்.

*Congress Exhibition*, 1957–58.

* 58 Q.—SRI M. JAGANNATHAN and SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of stalls taken by the various departments of the Government of Madras, in the Congress Exhibition in 1957–58;

(*b*) the total expenditure incurred on this account; and

(*c*) the amount spent by each department?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement is placed on the table of the House.

---

* Printed as Appendix I on page 232 infra.